ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2354/09 - 2023 ඔක්තෝබර් මස 17 වැනි අඟහරුවාදා - 2023.10.17
2354/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/163
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல.: 4-3/4/2014/LO/358

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் ஒய பளாத கோரளை சிறு பிரிவில் பார்க் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இலக்கம் 330176 கொண்டதும் 15.05.2023 ஆந் திகதியிடப்பட்ட கடத் திரல் வரைபடத்தில் காட்டப்பட்ட மொத்த விஸ்தீரணத்தின் 0.4047 ஹெக்டயார் கொண்ட பார்க் தோட்டம்

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: பார்க் தோட்டம்; விபரம்: புல் தரை; உரிமை கோருபவர்: உடபுஸ்ஸல்லாவ தோட்ட நிறுவனம்; விஸ்தீரணம்: 0.4047 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுவரெலியா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி. ஏ. பி. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2023, ஒற்றோபர் 13.

EOG 10 - 0172

1A - G 40538 - 14 (2023 /10)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*